தாம்பரம் நகர கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் பழைய 10வது வட்ட செயலாளருமான பி.பாரதி அவர்கள் இயற்கை எய்திய தகவலறிந்து அன்னாரின் உடலுக்கு கழக பொருளாளர் நாடாளுமன்ற கழக குழு தலைவர் டி. ஆர். பாலு அவர்கள் மலர்வளையம் வைத்து இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டார். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இளையான்குடி, மானாமதுரையில்

'நீட்' எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்!

தமிழரசி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சிவகங்கை. நவ. 27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் ஏற்பாட்டின் பேரில் இளையான்குடியில் டாக்டர்ஜாகிர்உசேன்கல்லூரி முன்பாகவும், மானாமதுரையில் அனுசுயாதிருமண மண்டபத்திலும் நீட்தேர்வு எதிர்ப்பு ஆன்லைன்கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. முதல் கையெழுத் திட்டு திருமதிதமிழரசிரவிக்குமார் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள்எம்.எல்.ஏக்கள்சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் காவெங்கட் ராமன், வே.தமிழ்மாறன்,ஆறு.செல்வராசன்,எம்.அண்ணா துரை, துரை.ராஜாமணி, இளையான்குடி பேரூராட்சிமன்றதலைவர்பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலை வர் இப்ராஹிம்,மானாமதுரைஒன்றியகுழுதலைவர்திருமதிலதா அண்ணாதுரை,துணைத்தலைவர் முத்துசாமி, மானாமதுரை நகர மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், மற்றும் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாஸ்கரன், முத்துச்சாமி, மாவட்ட மகளிர் தொண்டர்அணி துணை அமைப்பாளர் நஸ்ரின்பேகம், மாவட்ட இளைஞர் அணி துணைஅமைப்பாளர்கார்த்தி, கூட்டுறவு சங்க தலைவர் சுப. தமிழரசன், முருகேசன் சௌந்தர், கனி, சிவமணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கண்ணன், விவசாய அணி பா.காளிமுத்து, வே. கருணாகரன் உள்பட கல்லூரி பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கையெழுத் திட்டார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு118, கௌடியா மடம் சாலை, அம்மையப்பன் சந்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை நேற்று முன்தினம் (25.11.2023) தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி, துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி யு.மல்லிகா, மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் டேன்டீ தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு நாள் ஊதியம் ரூ.375/ஐ , 438 ரூ/ ஆக உயர்த்திய தோடு, 20% பண்டிகை கால போனசையும் அறிவித்து தொழிலாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு குன்னூரில் டேன்டீ ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் (LPF) சார்பில் நடத்தப்பட்ட நன்றியறிவிப்பு கூட்டத்தில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் இராசா, சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், வனத்துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், நீலகிரி மாவட்ட கழகச செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இளைஞர் அணி மாநில மாநாட்டில் பெருமளவில் பங்கேற்பு!

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

எழுச்சியுடன் கொண்டாடத் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, நவ.27 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்களான மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜெயபிரகாஷ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் போஸ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர். மணிவண்ணன், பொருளாளர் மு.லோகநாதன், பொதுக் குழு உறுப்பினர்கள் கே. பாண்டியன், எஸ்.பி.டி.சார்லஸ், இல.பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.சிவக்குமார், உமாசெந்தாமரைச்வெல்வன், மாநில சிறுபான்மை நலடபடிபடி பவி துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், ஆர்.டி.எஸ். சரவணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா. மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், செல்வ. செங்குட்டுவன், கே.பழனியப்பன், நகரக் கழகச் செயலாளார்கள் மா.மீ.புகழேந்தி, இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி. என்.கார்த்தி, ப.உதயக்குமார், அ.பாரிபாலன், ஆர். ஏ. டி. அண்ணாதுரை, ப.முருகானந்தம், ஆர்.துரைராஜ், கேஸ்.வி.செந்தில், கே.எஸ்.சாகுல்ஹமுதுராஜா, எஸ்.பால்ராஜ், இளம்சுந்தர், ஆh.சுரேந்தர், கமல், சந்திய மூர்த்தி, எஸ்.சந்தோஷ், என். தினேஷ்குமா, வி.கமல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், தி.கலையரசன், எஸ்.டேனியல்சத்தியா, மாவட்ட கலைஇலக்கிய பேரவை மாவட்ட தலைவர் இரா.தங்கதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க பூத்கமிட்டி உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணிகளை விரைந்து ஒரு வாரத்திற்குள் முடித்து மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் ஒப்படைக்க வேண்டும் என்றும்,

1742ம் ஆம் ஆண்டு தனது 18 வது வயதில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திராவிட நாடு வர இதழில் இளமை பலி என்ற கட்டுரை எழுதி தான் கொண்ட இலட்சியத்திற்காக இளையை பலி கொடுக்கவும் தயார் என முழுங்கி புதியதோர் இளைஞன் எழுச்சிபூத்துக்குலுங்கிட எழுதுகோல் எடுத்து இளைஞனே விழி, எழு நல் எண்ணங்களை எங்ஙனும் நாடு என எழுதியவர் அன்றைய இளைஞர் நமது முத்தமிழ் கலைஞர் அவர்கள் கடந்த 2007 டிசமபர் 15, 16 அன்று இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டிற்காக இலட்சிய கொடியேந்தி இளைம்பிறைகளே வாரீர், வாரீர் உன் இலட்சிய பயணம் தொடரட்டும் என அன்று அழைப்பு விடுத்தார். நமது கழகத்தலைவர் தளபதி அவர்கள். 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி இரண்டாது மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளிலும் இருசக்கர வாகனத்தில் இளைஞர் அணி மாநாட்டிற்கு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்து கழமையாக உழைத்து வரும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு, கழக இளைஞர் அணி இரண்டவது மாநில மாநாட்டிற்கு நாகை மாவட்டத்தில் இருந்து தொகுதிக்கு 2000 இளைஞர்கள் வீதம் 6000 த்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை நாகை மாவட்டத்தில் இருந்து கலந்து கொள்ள செய்வது எனவும், மாநாட்டில் இளைஞர்களை கலந்து கொள்ள செய்யும் பணியில் ஒன்றிய, நகர,

பேரூர் கழகச் செயலாளர்களும், அவர்களுடன் இணைந்து மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் செய்திட வேண்டும் என்றும், கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள நீட் விலக்கு நமது இலக்கு என்ற இலட்சிய பயணத்தில் இளைஞர் அணியினரால் நடத்தப்படும் கையெழுத்து இயக்கத்தில் தீவிரமாக களப்பணியாற்றி நாகை மாவட்டத்தின் சார்பில் அதிக அளவில் பொதுமக்களிடம் கையெழுத்து பெற்று இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களிடம் சேலம் மாநாட்டில் ஒப்படைக்கும் வகையில் செயல் ஆற்றுமாறு ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களையும் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி ஆகியோரை கேட்டுக் கொள்வது என்றும், கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆணைக்கிணங்க மாவட்டக் கழகச் செயலாளர் வழிகாட்டுதல்படி நாகை மாவட்டத்தில் உள்ள பாகநிலை முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர் அடங்கிய செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம் இது வரை நடத்தி முடிக்காத ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் விரைவில் மாவட்டக் கழக செயலாளருடன் கலந்து பேசி விரைவில் கூட்டத்தினை நடத்தி முடிக்க வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகை மாவட்டம் முழுவதும் 100கொடிக் கம்பங்கள் அமைத்து கழகதின் இருவண்ணக் கொடியேற்றி சிறப்பு சேர்க்க வேண்டும் எனவும், கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கூடிய விரைவில் தகுதியான இடங்களில் தேர்வு செய்து கொடிக்கம்பம் அமைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்களை மீண்டும் நினைவுபடுத்தி கேட்டுக் கொள்கிறது எனவும், *25.11.2023, 26.11.2023* ஆகிய தேதிகளில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்குச்சாடி மையங்களில் நடைபெற உள்ளது. எனவே பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி ஆகியோர்களை கொண்டு பணிகளை சிறப்பாக செய்து முடிவில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்த பணிகளின் விபரங்களை மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களை கேட்டுக் கொள்வது எனவும், கழகத்தின் இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் இன்று *(27.11.2023)* மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரம் எழுதி வாழ்த்து தொரிவித்தும், வார்டு, கிளைகள் தோறும் இருவண்ணக் கொடியேற்றியும், இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் எனவும் இந்த பணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி

12, 13 -வது வட்டங்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம்!

சென்னை, நவ. 27-

தலைமைக் கழக உத்தரவின் படியும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் ஆலோசனைபடியும் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12 மற்றும் 13ம் வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் புதிய வாக்காளர்கள் சேர்த்தல், திருத்தல் முகாம் தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் பா.பால உமாபதி, மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன், வட்ட துணைச் செயலாளர் எஸ். முத்துராஜ், ராமராஜ் பாக முகவர்கள் ஓய்.எஸ்.ஆர். ரவி, 13 ஆவது வட்ட செயல்வீரர் டி.இ.பரணி குமார் வீ. சேகர், நா. ராஜ ராஜன், எம்.சீனிவாசன், கழக முன்னோடிகள் நா. அணில் குமார்,ஆர்.செந்தில் குமார், அ.ஸ்டீல் சரவணன் ,டி.சுரேந்தர், ரயில் சீனி, பிபழனி, எஸ்.அருள் ஆகியோர் தூய பவுல் மகாஜன பள்ளி மற்றும் கன்னியாகுருகுலம் அரசு பள்ளி ஆகிய பள்ளிகளில் வாக்காளர் சேர்தல், மற்றும் நீக்குதல் பணிகளை மேற்கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மணப்பாறை இரா. வீராசாமி

நவம்பர் 27 (2010)

மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரூர் வாசுகி முருகேசன்

நவம்பர் 27 (2009)

கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நாணிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.